Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா! 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (16 - 03 - 1991) சனிக்கிழமை ஓசை 26

## சம்பளப் பணத்திற்குப் பதில் அஞ்சல் தலைகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அலுவலகங்களில் போதியளவு பணம் புழக்கத்தில் இல்லாத காரணத்தால் இங்கு கடமை புரியும் அலுவலக ஊழியர்களுக்கு சம்பளப்பணத்திற்குப் பதிலாக அஞ்சல் முத்திரைகளே வழங்கப்படுகிறது. இவர்கள் இந்த முத்திரைகளைத் தனியார் கடைகளில் விற்று பணத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

ஆறாம் ஆண்டு தமிழ் சிறார்களுக்கு

# வரலாற்றுப் பாட நூல்கள்

# ஏற்புடையதல்ல

## இ. த. ஆ. சங்க செயலாளர் கண்டனம்

(நமது நிருபர்)

ஆறாம் ஆண்டிற்கான வரலாற்று நூல்கள் தமிழ்ப் பாடசாலைகளுக்கு ஏற்புடையதல்ல. தமிழ்ச் சிறார்களுக்குத் துரோகம் செய்யும் வகையிலும் உண்மைக்குப் புறம்பான ரீதியிலும் கட்டுக்கதைகளை கொண்டு எழுதப்பட்டுள்ளன என இலங்கை தமிழர் ஆசிரியர்கள் சங்கப் பொதுச்செயலாளர் மகாசிவம் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மகாசிவம் அவர்கள் விடுத்த அறிக்கையில்;

ஆறாம் ஆண்டுக்கான வரலாற்றுநூல் தமிழ்ப் பாடசாலைகளுக்கு ஏற்புடையதல்ல. முதலாம் அத்தியாயம் தவிர்ந்த ஏனைய பாடங்கள் யாவும், சிங்கள இனத்தையும், பௌத்த சமயத்தையும் பின்னணியாகக் கொண்ட மகாவம்சம் என்ற புத்தகத்தில் காணப்படும் கட்டுக்கதைகளைக் கொண்டு எழுதப்பட்ட பாடப் பரப்பினைக் கொண்ட புத்தகமாக அமைந்துள்ளது.

தமிழ்ச் சிறார்களுக்குத் துரோகம் செய்யும் வகையிலும், உண்மைக்குப் புறம்பாகவும் அமைந்துள்ள இந்த நூலைக் கற்பிக்க முடியாமல் இருக்கிறது என்று வரலாற்றுப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புதிய எம்.பி.யாக ரஞ்சன் மான்

(கொழும்பு)

காலஞ்சென்ற அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவின் நாடாளுமன்றப் பிரதிநிதிப் பதவிக்கு அவரது மனைவி ரோகான் விஜேரட்னா நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு இந்த நியமனத்தினை அங்கீகரித்துள்ளதாகத் தெரிகிறது. இச் செயற்குழுக்கூட்டம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தலைமையில் நடைபெற்றது.

## 64பேர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு நிறைவேற்று அதிபர்களாக சுமார் 64 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிலாவத்துறையில் குண்டுவீச்சு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள சிலாவத்துறைப் பகுதியில் நேற்றுக்காலை ஆறு மணி தொடக்கம் ஏழு மணி வரை இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் எட்டுக் குண்டுகளை வீசியுள்ளன. இத்தாக்குதலில் ஒருவீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து இப்பகுதியை நோக்கி ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

## விமன்காமத்தில் மோதல்

(யாழ்ப்பாணம்)

வீமன்காமம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு

(4ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் இரு வாரங்களுக்கு சகலருக்கும் நிவாரணம்

### -யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

மேலும் இரு வாரங்களுக்கான உலர் உணவு கொடுப்பனவை யாழ். மாவட்டத்தில் உள்ள அனைவருக்கும் நிவாரணமாக வழங்குவதற்கு தாம் அனுமதி பெற்றுள்ளதாக கொழும்பு சென்று திரும்பிய யாழ் அரச அதிபர் நேற்று கூறினார்.

யாழ். மாவட்டத்திலுள்ள பல சேவை நிறுவனங்களும் பொதுமக்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த கொடுப்பனவுக்கான அனுமதியை அரச தரப்பு அதிகாரிகளுடன் பேசி பெற்றுக் கொண்டதா

(4ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நேரம் விமானப்படை தாக்குதல் நடத்தக் கூடாது

### -யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் விசேட பரீட்சைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடாத்தக் கூடாது என பாதுகாப்பு வட்டாரங்களைத்தாம் கேட்டுக்கொண்டதாக கொழும்பு சென்று திரும்பிய யாழ் அரச அதிபர் அன்ரன் அல்பிரட் தெரிவித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணப்பதாரர்கள் விநியோகிக்க தொண்டர் ஸ்தாபன உதவி

(கொழும்பு)

"வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கான க. பொ. த. உயர்தர பரீட்சை விண்ணப்பதாரர்களை விநியோகிப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட தொண்டர் ஸ்தாபனங்களின் உதவி பெறப்படும்" என பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் ஆர் வெதமுல்ல தெரிவித்தார்.

இது தொடர்பான முடிவு

(4ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைத் தமிழர் விவகாரத்தில்

## இருபது தமிழக இயக்கங்கள் ஒன்றுபட்டுச்செயற்பட முடிவு

(சென்னை)

தமிழர் தேசிய இயக்கத்தின் தலைமையின் கீழ் இருபது தமிழர் இயக்கங்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக ஒன்றுபட்டுச் செயற்பட முன்வந்துள்ளன. விடுதலைப் புலிகளை கைது செய்வதாகக் கூறிக்கொண்டு நூற்றுக் கணக்கான இலங்கைத் தமிழ் அகதிகளை மாநில அரசு கைதுசெய்து சிறையில் வைத்திருப்பதையும் தமிழர் தேசிய இயக்க மாநாடு கண்டனம் செய்துள்ளது.

## நாளை 'விடுதலைப்புலிகள்' வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வ அரசியல் ஏடான விடுதலைப் புலிகள் குரல் 21 நாளை வெளிவரவுள்ளது. இதில் புதிய பரிமாணத்தில் இந்தியத் தமிழீழ என்னும் ஆசிரிய தலையங்கமும், இந்திய இராணுவத்தின் சிறையை உடைத்துத் தப்பிவந்த சிறையுடைப்புச் சம்பவம் என்ற கட்டுரையும், "குடும்பமாக வெளிநாடு செல்பவர்களின் சொத்துக்களைக் கைபெற்கிறோம் இது சுவீகரிப்பல்ல" என்ற விளக்கக் கட்டுரையும் வெளிவரவுள்ளன. (மு)

## சுயதொழில் நிதியுதவி தொடரும்!

(யாழ்ப்பாணம்)

1989 90ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் சுயதொழில் ஆரம்பித்த யாழ் மாவட்டத்தவரின் தொழில்களுக்குத் தொடர்ந்து நிதி உதவி வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் அன்ரன் அல்பிரட் நேற்றுத் தெரிவித்தார். (லோ)

புலிபாய்ந்த கல்லை

## சுற்றிவளைக்க முயன்ற ராணுவத்துடன் புலிகள்மோதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இரான், செங்கலடி, சந்திவெளி ஆகிய மூன்று இராணுவ முகாம்களிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை நான்கு மணியளவில் வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் புலிபாய்ந்தகல் என்னும் கிராமத்தைச் சுற்றிவளைக்க முயன்றபோது அப்பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டனர். சேதவிபரம் தெரியவில்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளம் இராணுவம் மீது "அருள் 89" தாக்குதல்

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் புதுவீதிச் சந்தியில் நின்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட 'அருள் 89' தாக்குதலால் இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டது.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் தாண்டிக்குளம் புதுவீதிச்சந்தியில்உள்ள கடை ஒன்றில் நின்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது புலிகளால்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் தாக்குதலால் படகு தீப்பற்றி எரிந்தது

பொலிகண்டிக் கடலில், கரையை நோக்கி வந்துகொண்டிருந்த படகை நோக்கி சிறிலங்கா கடற்படையினர் பிரயோகித் தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலினால் படகு தீப்பற்றி எரிந்தது: இப்படகில் பிரயாணம் செய்தவர்களின் நிலை இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரியவரவில்லை.

நேற்றுக்காலை (15-ம் திகதி) 8-15 மணியளவில் இச்

(4ஆம் பக்கம் பார்க்க)

சம்பூர் கூனித்தீவில்

## தமிழர் மீது தாக்குதல் ஒருவர் சுட்டுக் கொலை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர், கூனித்தீவு ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற்படையினரும் இணைந்து ஏழு பொதுமக்களைக் கைது செய்து சித்திரவதைப்படுத்தியதுடன் ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். அத்துடன் பொதுமக்களின் எண்பத்தைந்து வீடுகளை ...

(4ஆம் பக்கம் பார்க்க)

## புதிய உயர் கல்லூரி

ஆரியதளம் சந்தி - யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

புதிய பிரிவு ஆரம்பம் 16.3.91

*G. C. E. O/L*

ஆண்டு 10, 9

புதியபிரிவுகள் ஆரம்பமாகின்றன

(B-2141)

---

★ உங்களுக்குத் தேவை யான புகைப்படங்கள் றபர் சீல்
★ HALFTONE - LINE கலர் புளொக்ஸ் (Blocks
★ கலர் பிலிம் கழுவ்கள்
★ ஓவிய வேலைகள்
★ கலர் பிலிம்சுருள்களை படமாக்குதல்பெருப்பித்தல்
★ பிறேம் போடுதல்
★ ஸ்ரிக்கேஸ் தயாரிப்பாளர்கள்

**கொழும்பு ஸ்ரூடியோ**

55, மணிக்கூட்டு வீதி
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.
245, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (B-2091)

---

## விணணக வாழ்வின்

### 41 ஆம் நாள் நினைவு அஞ்சலி



| வீர ஜெனனம் | வீரமரணம் |
|---|---|
| 08 - 05 - 1975 | 03 - 02 - 1991 |

**செல்வன் செபமாலைமுத்து ஜெக்சன் (சஜன்)**

*"மறைந்த வீரன் கனவு பலிக்கும்*
*மகிழ்ச்சிக் கடலில் தமிழீழம் குளிக்கும்."*

இவரின் ஆன்மா சாந்திக்காக 16-03-91 காலை 6.30 மணிக்கு மிருசுவில் புனித சன் நீக்கிலஸர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உன்பிரிவால் உளம் நோகும்;
அன்பு அப்பா, அம்மா, அண்ணாமார், அக்கா, தங்கைமார், தம்பி, பேர்த்தி, உறவினர், நண்பர்கள்.
பளை தெற்கு,
வயாவிளான்.

(R/ 1'87)

---

## க. பொ. த. சாதாரண தரம்

# PRACTICE EXAM

# பயிற்சிப் பரீட்சை

1990 Dec. இல் நடைபெற்ற க. பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குரிய மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

- யாழ். குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றலாம். ஆனால் பரீட்சை நிலையங்கள் யாழ். மாநகர சபை எல்லையினுள்ளேயே அமையும்.
- யாழ். மாநகரசபை எல்லை தவிர்ந்த குடாநாட்டில் வேறு பகுதிகளில் பரீட்சை நிலையங்களை அமைக்க விரும்பும் நிறுவனங்கள் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்புகொண்டு அதனை ஒழுங்குசெய்யலாம்.
- கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, ஆங்கிலம், தமிழ் ஆகிய ஐந்து பாடங்களில் மட்டுமே இப்பரீட்சை நடைபெறும்.
- 20—03—1991 இற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட முகவரியில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்து பரீட்சைக் கட்டணமாக ரூபா 50-00 செலுத்துதல் வேண்டும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- பரீட்சைக்கான நேர அட்டவணை, சுட்டெண், பரீட்சை நிலையம் போன்ற விபரங்கள் அடங்கிய அனுமதி அட்டை மாணவர்களுக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும்.
- தகுதி அடிப்படையில் பரிசுகள் வழங்கப்படும். ஐந்து பாடத்துக்குமுரிய மொத்தப் புள்ளிகளில் அதிகூடுதலான கூட்டுத்தொகையை பெறுபவருக்கு தங்கப் பதக்கமும், ஒவ்வொரு பாடங்களிலும் கூடுதலான புள்ளியைப் பெறுபவர்களுக்கு விசேட பரிசில்களும் வழங்கப்படும்.

**Examination Unit**

**UNIVERSAL**

**Kantharmadam, JAFFNA.**

★★பரீட்சை மேற்பார்வையாளர்களாக, வினாத்தாள் திருத்துபவர்களாக கடமையாற்ற விரும்பும் ஆசிரியர்கள் இத்துறையில் தமது அனுபவம், தகைமை போன்றவற்றைக் குறிப்பிட்டு 20. 03. 1991 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

(B.2189)

---

## நினைவு கூருகின்றோம்

### மார்ச் 16

1986 ஆம் ஆண்டு வளலாயில் ஏற்பட்ட மோதலின் பின் சயனைட் அருந்தி வீரமரணமடைந்த
சங்கர் (பா. சந்திரசேகரி - பருத்தித்துறை)

இதே ஆண்டு கிளிநொச்சி கரடிபோக்குச்சந்தியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின்போது வீரமரணமடைந்த
பரன் (வே. தர்மலிங்கம் - தண்ணீரூற்று)

இதே ஆண்டு கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்தியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்த 10 பொது மக்கள்

1987 ஆம் ஆண்டு முல்லைத்தீவு தேவிபுரத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த
※ சிவா / அப்பன் (கமலநாதன் - உரும்பராய்)

இதே ஆண்டு வீரமரணமடைந்த
ரஞ்சன் (த. விமலரஞ்சன் - முள்ளியவளை)

இதே ஆண்டு விசுவமடுவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட 10 பொதுமக்கள்

1988 ஆம் ஆண்டு வெள்ளாங்குளத்தில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த
லெப். முரளி (மரியதாஸ் அன்புமணி - உயிலங்குளம் மன்னார்)
லெப். தான்பரீன் (சின்னையா ஜெயகுமார் - கிளிநொச்சி)

1989 ஆம் ஆண்டு திருமலை சேனையூரில் தேசவிரோத சக்திகளுடனான மோதலில் வீரமரணமடைந்த
ஜெயா (க. திருச்செல்வம் - கட்டைபறிச்சான்)
2ஆம லெப். காண்டீ (நா. கதிர்காமத்தம்பி - கிளிவெட்டி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

※ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் சிவா ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2143)

---

## குறைந்த விலை நிறைந்த தரம் சிறந்த சேவை

- மின்சாரப் பொருள்கள்
- அழகுசாதனப் பொருள்கள்
- புடைவை வகைகள்
- எவர்சில்வர், அலுமினியப் பாத்திரங்கள்
- சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் பொருள்கள்
- பாடசாலை, அலுவலக உபகரணங்கள்
- கண்ணாடி பாத்திரங்கள், பிளாஸ்ரிக் வகைகள்

இன்னும் உங்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் ஒரே இடத்தில் வசதியாக பெற்றுக்கொள்ள

**எழிலகம்**

மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்திக்கருகாமையில்)
யாழ்ப்பாணம்.

(B/2130)

### ✲ சிந்தனைக்கு ✲

அது அதிசயம், ஆனால் உண்மை,
உண்மை என்றுமே விசித்திரமானது;
கற்பனையை விடவும் அற்புதமானது!

— பைரன் பிரபு

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 16-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 085-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# ரஞ்சனின் இடத்தை நிரப்ப மூன்று நபர்கள்

பெருந்தோட்டத்துறை அமைச்சரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளருமான ரஞ்சன் விஜேரெட்னா கொல்லப்பட்டதைத் தொடர்ந்து சிறிலங்கா அமைச்சரவையில் சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாற்றம் சிறிதாக இருந்தாலும் சிறிலங்கா ஜனாதிபதியின் நோக்கம் அதில் தெளிவாகத் தெரிகின்றது.

கொல்லப்பட்ட ஜெனரல் ரஞ்சன் விஜேரெட்னா வகித்த மூன்று பதவிகளும் மிகவும் முக்கியமானவையாகும். சிறிலங்காவின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான பெருந்தோட்டத்துறை அமைச்சராக ரஞ்சன் இருந்தமையால நிதி விசயத்தில் அவரின் கை பலமானதாக இருந்தது. பாதுகாப்பு இணையமைச்சராகவும் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவும் இருந்தமையால் படையினரின் செல்வாக்கும் அவருக்கு போதியளவில் காணப்பட்டது. மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளராக இருந்தமையினால் அரசியல் வட்டத்திலும் அவரின் செல்வாக்கு உயர்வாக இருந்தது. அதோடு செல்வாக்கான குடும்பப்பின்னணியும் அமைச்சர் ரஞ்சன் விஜேரெட்னாவிற்கு அரசியலில பக்கபலமாக இருந்தது.

இந்த நிலையில் அமைச்சரவையில் ரஞ்சனின் நிலை மிகவும் பலமாக இருந்தமையால் அவரின பெரும்பாலான செயற்பாடுகள் கட்டுப்பாடற்றவையாக இருந்தன. சிறிலங்கா ஜனாதிபதிக்கு அடுத்து ஒரு பலமான நிலையில் இருந்த அமைச்சர் ரஞ்சன் சிலவேளை ஜனாதிபதியை விட அதிபலமாக இருந்தார் எனவும் சொல்லலாம். அமைச்சர் இவ்வாறு உருவாகியமை எவரும் எதிர்பாராத ஒரு விடயம் என்றே சொல்ல வேண்டும்.

இன்று அமைச்சர் ரஞ்சன் விஜேரெட்னா வகித்த அமைச்சுக்களும், பதவிகளும் சிறிலங்கா ஜனாதிபதியால் பகிர்ந்தளிக்கப்பட்ட முறையை நோக்கும் போது சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அமைச்சர் ரஞ்சனின் வளர்ச்சியை முற்றாக விரும்பியிருக்கவில்லை போல் தெரிகின்றது. பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல் தனிப்பட்ட அமைச்சர் ஒருவர் வளர்ச்சி தமது எதிர்காலத்திற்கு எவ்வாறு பங்கம் விளைவிக்கும் என்பது ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு நன்கு தெரியும். கடந்த கால தனது வரலாறே அதை விளங்க அவருக்குப் போதுமானதாகும்.

அத்தோடு அமைச்சர் ரஞ்சனின் சில நடத்தைகள் சிறிலங்கா ஜனாதிபதிக்கு நேரடியாகவே எச்சரிக்கை செய்வது போன்றும் இருந்தது. கொழும்பில் நடந்த வைபவம் ஒன்றில் ஜனாதிபதியின் மகனின் அரசியல் பிரவேசத்தை ஜனாதிபதியின் முன்னிலையிலேயே விமர்சித்த அமைச்சர் ரஞ்சன் விஜேரெட்னா தொண்டனாக இருந்து கட்சிக்காக உழைத்து முன்னேற வேண்டுமே ஒழிய அப்பாவின் (ஜனாதிபதியின்) செல்வாக்கில் முன்னுக்குவர முயற்சிக்கக் கூடாது எனவும் போதித்தார். இவ்வாறாக சிறிலங்கா ஜனாதிபதியின் மகனை ஜனாதிபதிக்கு முன்னிலையில் விமர்சிக்கும் பலத்தினை ரஞ்சன் மட்டுமே கொண்டிருந்தார்.

இந்த நிலையில் அமைச்சர் ரஞ்சன் கொல்லப்பட்டதன் பின்னர் அவ்வாறானதொரு பலமான அமைச்சர் உருவாவதை ஜனாதிபதி விரும்பவில்லை போலும் தெரிகிறது. அதன் காரணமாக அவரது அரசியல் வட்டமும் குறுகியது அமைச்சர் வட்டமும் குறுகியது.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் அமைச்சரவையைப் போன்று திறமைசாலிகள் இடம் பெறவில்லை என ஜனாதிபதி பிரேமதாசா அமைச்சரவை அமைத்த போதே கூறப்பட்டது. ஆனால் புதிய அமைச்சரவையை உருவாக்கிய ஜனாதிபதி பிரேமதாசா அமைச்சர்களின் செயற்பாடுகளுக்கு ஏற்ப ஒவ்வொரு வருடமும் அமைச்சரவை மாற்றம் இடம் பெறலாம் எனத் தெரிவித்தார். ஆனால் அதை அவர் ஒழுங்காக மேற்கொண்டதாகவில்லை.

ஆனால் அமைச்சர் ரஞ்சனின் கொலையுடன் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றமானது மேலும் தனது பிடியை இறுக்கியதோடு அரசியற் பலமற்ற அமைச்சர்களை உருவாக்கியதுமாகவே அமைந்துள்ளது.

இதனை பிரதமமந்திரியும் நிதிமந்திரியுமான டி. பி. விஜேதுங்காவிடம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டமையும் மக்கள் மத்தியிலும், குடும்பச் செல்வாக்கும், பிராந்தியச் செல்வாக்கும் மிக்க காமினி திசநாயக்கா, லலித் அத்துலத் முதலி, ரணில் விக்கிரமசிங்கா போன்றோர் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டதில் இருந்தும் உணர்ந்து கொள்ளலாம் அதாவது அமைச்சர் ரஞ்சன் போன்று வேறொருவர் உருவாவது தடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறிலங்கா ஜனாதிபதி பல செம்மறிகளின் மத்தியில ஒரு சிங்கமாக இருக்க முற்படுகின்றார் என்பது தெரிகின்றது.

# வாகனங்களுக்கு வரி வழங்கும் வேலைகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வாகனங்களுக்கு வரி வழங்கும்பிரிவு மீண்டும் சேவையை ஆரம்பித்துள்ளது. யூன்மாதம் ஆரம்பித்த இராணுவ தாக்குதல்களுடன் இந்தப் பிரிவு தனது வேலைகளை நிறுத்தி இருந்தது. இப்பொழுது அந்தப் பிரிவு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் வாகன அனுமதிப்பத்திரம இன்னும் வழங்கப்படுவதற்கு வசதி ஏற்படவில்லை. இதனால் இந்த அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாக அனுமதிப்படிவம் ஒன்று மட்டுமே இப்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. வாகன அனுமதிக்கான அறவீட்டுப் பணம இவ்வருடம் சென்ற வருடத்திலும் பார்க்க 40வீதம் அதிகரித்த கட்டணமாக அறவிடப்படும என வாகன அனுமதிப்பத்திரக பிரிவின் அதிகாரி தெரிவித்தார்.

மேலும் உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் தவிர்ந்த அனைத்து மோட்டார் வாகனங்களும் தகுதிச் சான்றிதழ் கொண்டுவரும வாகனச் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இத்தகுதிச் சான்றிதழ் வடபிராந்திய போக்குவரத்துச் சபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும் அவ்வலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டது. (லோ)

# சிறிலங்கா ஜனாதிபதியால் அமைச்சரவையில் சிறு மாற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தனது அமைச்சரவையில் சில மாற்றங்களை செய்துள்ளார்.

காணி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சர் பி. தயாரத்னா புனர்நிர்மாண புனர்வாழ்வு சமூகநலத்துறை அமைச்சராகவும், மகாவலி அபிவிருத்தி அமைச்சரான காமினி அத்துக்கோறளை காணி நீர்ப்பாசன மகாவலி அமைச்சராகவும், புனர்நிர்மாண புனர்வாழ்வு அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரியை தொலைத்தொடர்பு அமைச்சராகவும், தபால் தொடர்பு அமைச்சர் அலுவிகார துறைமுக கப்பற் தொழிற்துறை அமைச்சராகவும், கப்பல் தொழில்துறை அமைச்சர் ரூபா கருணாதிலகா புதிய பெருந்தோட்டத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் புதிய அமைச்சர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் முன் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

# இடம்பெயர்ந்தோர் நிவாரணம் நாளாந்தம் 60-70 இலட்சம்

(கொழும்பு) - பிரட்மன்

இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கம் தினசரி 60 முதல் 70 இலட்சம் ரூபா வரையில் செலவிட்டு வருவதாக பிரட்மன்வீரக்கோன் நேற்று முன்தினம் நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கூறினார். அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தை மேற்கோள்காட்டி அவர் மேலும் பேசுகையில் வடக்கு, கிழக்கிற்கு உணவுப் பொருள்களை கொண்டு செல்வதற்கு தனியார் லொறிகளை வாடகைக்கு அமர்த்தியிருப்பதாகவும், அவை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கொடியுடன் செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

# இன்று மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான மாதாந்த கூட்டம் இன்று இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இக்கூட்டத்திற்கு அனைத்து மாணவ இயக்க அங்கத்தவர்களையும் வரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# மாணவர்கள் ஈடுபட்டிருப்பின் மனம் வருந்துகிறோம்

## யாழ். பல்க. மாணவர் அவை

12. 3. 91 அன்று வந்த பல்கலைக்கழக மாணவர்களைப் பற்றிய பத்திரிகைச் செய்தியின்படி 1. 3. 91 அன்று நடந்த பேரணியின் பின்னர் ஒரு சில மாணவர்கள் அப்படிப்பட்ட சம்பவங்களில் ஈடுபட்டிருப்பின் அதற்காக மனம் வருந்துகிறோம்.

எமது பல்கலைக்கழகமானது தமிழீழப் போராட்டத்தைப் பலப்படுத்துவதற்காக விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கால கட்டத்தில் இருந்தே தனது பங்களிப்பினைச் செய்து வந்திருக்கிறது.

ஊர்வலங்கள் மட்டுமல்லாது பல்வேறு வழிகளிலும் பல்கலைக்கழக மாணவர்கள் தமது பங்களிப்பினைச் செய்து வந்திருக்கின்றனர். எனவே ஒரு சிலரின் செயல்களை வைத்து ஒட்டுமொத்தமாகப் பல்கலைக்கழக மாணவர்களையே பழிசுமத்துவது தவறானதாகும் எனப் பல்கலைக்கழக மாணவர் அவை விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

# பொதுக்கூட்டம்

வடபிராந்திய கூட்டுறவுத் தொழிலாளர் சங்கப் பொதுக்கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும் இன்று சனிக்கிழமை பி. ப. இரண்டு மணிக்கு கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் இடம் பெறவுள்ளது.

பொன். மதிமுகராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் தொழிற்சங்க பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள்.

# போலிச் சிட்டையை காட்டி 250 சீனி மூடை மோசடி

(கொழும்பு)

இறக்குமதியாளர் ஒருவர் களஞ்சியப் படுத்தியிருந்த 250 மூடை சீனியைப் போலியான வழங்குதல் சிட்டையைக் காட்டி களஞ்சியத்திலிருந்து அகற்றியதற்கான சந்தேகத்தின் பேரில் மூவர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். டாம் வீதி கலாநேசர்ஸைச் சேர்ந்த முன்னாள் ஊழியர் ஒருவரும், லொறிச்சாரதியும், களஞ்சியப் பொறுப்பாளருமே கைது செய்யப்பட்டவர்களாகும்.

கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்தச் சீனியின் விலை ரூபா 250,000 பெறுமதி என மதிப்பிடப்பட்டுள்ளது. கொழும்பு தெரு வர்த்தகர் ஒருவரால் இறக்குமதி செய்யப்பட்ட இந்தச் சீனி, பிறின்ஸ் ஒவ் வேல்ஸ் அவனியுவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

போலிதஸ்தாவேஜுகளைக் காட்டி களஞ்சியத்திலிருந்து அகற்றப்பட்ட இந்தச் சீனி, யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் சில்லறை வியாபாரிகளுக்கு விற்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது. சீனியை ஏற்றிப் பறித்த லொறிச் சாரதிக்கும் ரூபா 85,000 'சந்தோச'மாக வழங்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்கொண்டு விசாரணை நடைபெறுகின்றது.

# சிரமதானம்

ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலையத்தினர் சிரமதானம் மூலமாக ஆடியபாதம் வீதி, அடைக்கல நாயகி வீதிகளைச் சீர்திருத்தம் செய்தனர்.

வருடக்கணக்காக தார் ஊற்றாததால் சிரவல் பாதையாக இருந்த மேற்படி வீதிகளின் மருங்குகள் குப்பை கூழங்கள் நிறைந்து போக்குவரத்திற்கு இடையூறாக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. (21)

# இரு தமிழ் வர்த்தகர்களுக்கு கொழும்பில் விளக்கமறியல்

(கொழும்பு)

ரூபா 10 லட்சம் தீர்வையைச் செலுத்தாமல் சுங்க இலாகாவை ஏமாற்றிய குற்றத்தின் பேரில் கொழும்பில் இரு வர்த்தகர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். புறக்கோட்டை 2ஆம் குறுக்குத் தெருவில் உள்ள யுனிக்கோர்ன் வர்த்தக நிறுவனத்தைச் சேர்ந்த ஏ. பி. சுப்பிரமணியம், ஏ. பி. விஸ்வநாதனுமே கொழும்பு துறைமுக நீதிபதி திருமதி கே. வணிகசேகராவால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் இருவரும் போலிதஸ்தாவேஜுகளையும், கதவு அனுமதிச் சீட்டையும் காட்டி ரூபா 12 லட்சம் பெறுமதியுள்ள 27,432 மீற்றர் லேஸ் துணிப் பொதியைத் துறைமுகத்துக்கு வெளியே கடத்தியுள்ளார்கள். இறக்குமதிக்கான தஸ்தாவேஜுகளை சுங்கப்பகுதி விசேட விசாரணைப் பிரிவு பரிசீலனை செய்த சமயம் மேற்படி மோசடி வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

# ஊழியர் சேமலாப நிதிக் கணக்கில் பல குழறுபடிகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதிக் கணக்கில் பல குழறுபடிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மேற்படி நிதிக்கு இலங்கை பூராகவும் 1, 175, 444 பேர் தங்குதடைஎதுவுமின்றி ஒழுங்காகவும் மற்றும் 3, 297, 421 பேர் ஒழுங்கற்ற முறையிலும் நிதி செலுத்தி வருகிறார்கள். மத்திய வங்கியினால் சேகரிக்கப்படும் இந்த நிதிக்கு 1989 இல் 11 வீதமும் 1988 இல் 13 வீதமும் வட்டி வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஊழியர் சேமலாப நிதிக்குப்பணம் செலுத்துபவர்களே பாதிக்கப்படுவார்கள்.

மத்திய வங்கி சேமலாபநிதி நிர்வாகப் பிரிவு சேமலாப நிதிக்கணக்கில் 1989ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கு ரூபா 547 லட்சம் பற்றாக்குறை காட்டியுள்ளது. ஆனால் கணக்காளர் நாயகத்தின் அறிக்கையில் இத்தொகையானது குறைச்சல் அல்ல அதுமேலதிக வருமானமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் கணக்காளர் நாயகம் காமினி எப்பாவினால் சமர்ப்பிக்கப்பட்ட 1989 இற்கான அறிக்கையின்படி, மத்தியவங்கி வட்டியினால் கிடைக்கும் வருமானத்தை ரூபா 88 376, 410 எனக் குறைச்சலாகக் காட்டியுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை வருமான வரியால் வரவேண்டிய பணம் ரூபா 4 735, 3 6 என மேலதிகமாகக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கணக்காளர் நாயகம் காமினி எப்பாவின் அறிக்கை கூறுகின்றது. மத்தியவங்கி அதன் அறிக்கையின் சொத்து மதிப்பைக் குறைத்தும், கடன்சுமையைக் கூட்டியும் காட்டியுள்ளது. கணக்காளர் நாயகத்தினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பற்றாக்குறையையும், மேலதிக வருவாயையும் கணக்கிலெடுத்தால் ரூபா 547 லட்சம் பற்றாக்குறை என்ற பேச்சிற்கே இடமில்லை மாறாக ரூபா 380 லட்சம் மேலதிக வருமானம் காட்டுகிறது.

1989 ஆம்ஆண்டிற்கான மத்திய வங்கியின் அறிக்கையில் வேறு பல குறைபாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கணக்காளர் நாயகம் காமினி எப்பாவின் கணிப்பின்படி வெளிநாட்டுப் பிரயாணப் பணம்ரூபா 2,64 313 குறைச்சலாகக் காட்டப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் பயணங்களினால் ஏற்பட்ட செலவீனங்கள் ரூபா 3 80 ,085 என்றும் மத்திய வங்கி அதன் கணக்கு அறிக்கையில் வெளியிட்டுள்ளது. உள்ளூர்ப் பயணச் செலவு, ஊக்குவிப்புப் பணம் மேலதிக நேரக் கொடுப்பனவு என்பன ரூபா 5 00, 485 என கணக்கில் வைக்கப்பட்டுள்ளதாம்.

மத்திய வங்கியின் அறிக்கையில் இப்படியான குழறுபடிகளும், குறைபாடுகளும் இருப்பதால் 1989 க்கான ஊழியர் சேமலாப நிதிக்கணக்கைப் பற்றிய தனது கருத்தை வெளியிடக் கணக்காளர் நாயகம் மறுப்புத் தெரிவித்துள்ளார். 'வங்கிகளின் வங்கி' ஆகிய மத்திய வங்கிக்கும் இந்த நிலையா?

மத்திய வங்கியின் அறிக்கையில் மேலும் பல குறைகளை கணக்காளர் நாயகம் காமினி எப்பா அவதானித்தார். கணக்காளர் நாயகத்தின் விசேட அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், பிரதி நிதி அமைச்சின் கவனத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## 11ஆவது ஆண்டு நிறைவு விழா

(நமது நிருபர்)

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் பதினோராவது ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 2 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது. இதில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களும் சிறப்பு விருந்தினராக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். அத்துடன் கருத்துரைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

## சம்பளம்

தனியார் கடைகளிலோ ஒரு ரூபா பெறுமதியான முத்திரை ஒருரூபா ஐம்பது சதமாகவும் மற்றும் பெறுமதி மிக்க முத்திரைகளுக்கும் குறிக்கப்பட்ட விலையிலும் கூடுதலாகவே விலை கொடுத்துப் பொதுமக்கள் வாங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள்.

இந்த நிலையில் அஞ்சல் முத்திரைகளை அதிக விலை கொடுத்து வாங்குவதையிட்டு மக்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர். (58)

## மத்திய வங்கியின் அறிக்கை

## வரலாற்றுப்

கருத்துத் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இந்த நூலை ஆக்கியவர்கள் அனைவரும் சிங்கள பௌத்தர்களே. தமிழர்களோ, பௌத்த மதத்தைத் தவிர்ந்த ஏனைய மத தினரோ இந்தப் பாடக்குழுவில் இல்லை. இந்த நூலில் அறு சிங்கள அரசர்களின் ஆட்சிபற்றி எழுதப்பட்டுள்ளது தமிழ் இராய்ச்சியகளை. அரசர்கள் தொடர்பாக எதுவுமே இல்லை விஜயனும்தே தமிழர்களும் இலங்கையில் குடியேறிய பிறகுதான் நாகரிகமான மனிதர்கள் இலங்கையில் தோன்றினார்கள் என்றும் முற்றிலும் தவறான கருத்து நூலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தென் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள வரலாற்றுத் தொடர்புகள் மறைக்கப் பட்டிருப்பதோடு, மகாவம்சம் கூறும் ஆரியரின் புலப்பெயர்ச்சி ஐதீகத்திற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் சூறையாட்டக்காரர்கள், கொள்ளைக்காரர்கள் என்றும் அழைக்கப்பட்டுள்ளார்கள். துட்டகைமுனு எல்லாளனுடன் போராடப் படையை நடத்திச் சென்ற பாதை வரைபடம் போட்டுக் காட்டப்பட்டுள்ளது. அரசர்கள் போரிடச் செல்லும் பாதையை, 6 ஆம் வகுப்புச்சிறார்களுக்கு வரைபடம் மூலம் விளக்கும் முறை மேற்படி வகுப்புக்களுக்கான வரலாற்று நூல்களில் எந்த நாடுகளிலும் நாம் கண்டதில்லை என்றும். இந்தச் செயலானது சிங்களச் சிறார்களின் எண்ணக் கருவைத் தமிழர்களுக்கு எதிராக வளர்த்து வாலிபர்களைத் தமிழர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத்தூண்டும் நடவடிக்கையாகும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நூல் பௌத்த பேரினவாதத்தை நாடுதழுவிய தேசியவாதமெனக் காட்டும் நடவடிக்கையாகும் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

மேற்படி நூலை யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைஏற்றுக்கொள்ளவில்லை என்றும், தமிழ்ப்பாடசாலைகளில் இந்த நூல்களை உபயோகிக்க முடியாது உள்ளது என்று ,முதலாம அத்தியாயம் தவிர்ந்த ஏனைய பாடங்களை நீக்கிவிட்டு தமிழ் மக்களுக்கும் மற்றும் சமயங்களுக்கும் ஏற்புடைய உண்மையான வரலாற்றுநிகழ்ச்சிகளைப் பாடப் புத்தகத்தில் சேர்க்கும்படியும் த. ஆ. ச. செயலர் த. மகாசிவம் கல்வி அமைச்சருக்கும், ராஜாங்க அமைச்சருக்கும் அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

## பெற்றுக் கொள்ளவும்

(நமது நிருபர்)

ஓட்டுமடச் சந்தியில் நேற்று கண்டெடுக்கப்பட்ட துவிச்சக்கர வண்டியொன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் தகுந்த ஆதாரம்காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## ஊழியர்கள் சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் சகல மேசன், மின்பொறிவலர், தச்சுத்தொழிலாளிகளும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தற்காலிக காரியாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை பத்துமணிக்கு முகாமையாளரை சந்திக்குமாறு நிர்வாக முகாமையாளர் வை. த. சிவலிங்கம் கேட்டுள்ளார்.

## வீமன்காமத்தில்

9 மணியளவில் முகாமில் இருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் அருச்சுனா-89 தாக்குதலை மேற்கொண்டனர். சேதவிபரம் தெரியவில்லை. இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

## விளாத்தாள்கள்

கடந்த சனியன்று வடகிழக்கு கல்விப் பிரதேச கல்விப் பணிப்பாளர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் எடுக்கப்பட்டதாகவும் ஆசிர் வெதமுல்ல தெரிவித்தார்.

## பரீட்சை

தார்.

நேற்று நண்பகல் உள்ளூர் பத்திரிகையாளர்களை சந்தித்த அரச அதிபர் வல்வெட்டித்துறையில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்களின் குண்டுவீச்சால் இடம்பெற்ற அழிவுகள் பற்றிய அறிக்கை உட்பட ஒய்வூதியர்களை கொடுத்த மகஜர்களையும் அவற்றையும் தாம் அரசசார்பு அதிகாரிகளிடம் சமர்ப்பித்ததாகவும் தெரிவித்தார். (லோ)

## மேலும்

கவும் கூறினார்.

மேலும் அரச அதிபர் கூறுகையில் எழுபது மில்லியன் ரூபா எதிர்வரும் காலங்களில் வடபகுதிக்கு கொண்டு வருவதற்கு அனுமதித்திருந்த போதிலும் மேலும் அதை அதிகரிக்க வேண்டும் எனத்தாம் கேட்டுள்ளதாகவும் கூறினார் (லோ)

## 64 பேர்

இவர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்காதவர்கள் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (க)

லோக் சபாத் தேர்தல்

# தொகுதி உடன்பாடு பற்றி ஜெயலலிதாவுடன் பேசவுள்ளேன்

: ராஜீவ் காந்தி

தமிழ்நாட்டில் மக்களவைத் தேர்தலில் தொகுதிப் பங்கீடு குறித்து அ. இ. அ. தி. மு. க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுடன் பேச்சு நடாத்தவிருப்பதாகக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ராஜீவ்காந்தி புதுடில்லியில் செய்தியாளரிடம் கூறினார். மேலும் அவர் கூறுகையில், சந்திரசேகர் அரசுபதவியிறங்க காங்கிரஸ் காரணமல்ல என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இதனிடையில் காங்கிரஸ் கட்சியுடனான தேர்தல் உடன்பாடு சட்டமன்றத் தேர்தல் களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியது என செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

# ராஜீவ் காந்தியின் கூற்று வெறும் கண்துடைப்பு

: கருணாநிதி

(சென்னை)

ஆளுநரின் அறிக்கையில்லாமல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பதவிநீக்கம் செய்யப்பட்டது பற்றித் தாம் ஆச்சரியப்பட்டதாக காங்கிரஸ் ஐ கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி கூறியிருப்பது வெறும் கண்துடைப்பு என தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் சென்னையில் செய்தியாளர்கள் மாநாட்டில் பேசிய திரு. கருணாநிதி மேலும் தெரிவிக்கையில்,

தி. மு. க. அமைச்சரவை பதவி நீக்கம் செய்யப்பட்ட விதத்தை காங்கிரஸ் ஐ கட்சி உண்மையிலேயே எதிர்க்கின்றது என்றால் மக்களவையின் குடியரசுத் தலைவர் ஆட்சிப் பிரகடனத்திற்கு ஒப்புதல் அளிக்கும் தீர்மானத்திற்கு எதிர்த்து வாக்களித்து இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அப்படியே அத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்து இருக்க விரும்பாவிட்டாலும் தமது எதிர்ப்பைக் காட்டும் வகையிலாவது சபையில் இருந்து வெளிநடப்புச் செய்திருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முடிச்சுடன் மறைந்தவர் புலிகளால் மடக்கப்பட்டார்

வழிப்போக்கரிடமிருந்து 25,000 ரூபா பெறுமதியான உடுபுடைவைப் பொதியை அபகரித்துக்கொண்டு தலைமறைவாகிய ஒருவர் விடுதலைப்புலிகளிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

எழுதுமட்டுவாள் இளாலியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சாவகச்சேரியைச் சேர்ந்த மா. பேரின்பநாயகம் என்பவர் இளாலி இறங்குதுறையிலிருந்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபுடைவைப் பொதியுடன் பூநகரி நோக்கிச் சென்றுகொண்டிருந்ததாகவும், அப்பொழுது இளாலியைச் சேர்ந்தவ. இராசரத்தினம் என்பவர் உடுபுடைவைப் பொதியைக் கொண்டு வந்து உதவுவதாக வாங்கிக்கொண்டு தலைமறைவாகி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக பொதியைப் பறிகொடுத்தவர் இளாலி இறங்குதுறைப் பொறுப்பாளர் இஸ்லியிடம் முறையிட்டதைத் தொடர்ந்து தேடுதல் மேற்கொண்ட போராளிகள் சம்பந்தப்பட்டவரை கையும் மெய்யுமாகப் பிடித்தனர். விசாரணையின் பின்னர் உடுபுடைவைப் பொதியை போராளிகள் உரியவரிடம் ஒப்படைத்தனர். (செ. தமை)

## கடற்படையின்

சம்பவம் இடம்பெற்றது.

படகு தீப்பற்றி எரிந்த இடம் ஐந்து நிமிடங்களுக்கு கரும்புகை மண்டலமாக காட்சியளித்ததாக, கடற்கரையில் நின்ற மக்கள் தெரிவிக்கின்றனர். (செ. தமை)

## தாண்டிக்குளம்

மேற்கொள்ளப்பட்ட 'அருச்சுனா 89' தாக்குதலால் இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது. சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை.

பின்னர் இராணுவத்தினர் முகாமில் இருந்து மப்புதுகளும் மேற்பட்ட எறிகணைகளை சாஸ்திரி கூழாங்குளப் பகுதியை நோக்கி ஏவியுள்ளனர். இதனால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

## சுற்றிவளைக்க

பின்னர் இதே இடத்தில் புலிகளின் மிதிவெடிகளில் சிக்கிய இரண்டு இராணுவத்தினர் தமது கால்களை இழந்துள்ளனர்.

## தமிழர்

பணம் என்பனவற்றையும் கொள்ளையடித்துள்ளனர்.

கடந்த திங்கள் செவ்வாய் ஆகிய தினங்களில் சிறிலங்கா இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவற்படையினரும் சம்பூர், கூனித்தீவு ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்து ஏழு தமிழ்ப் பொதுமக்களைக் கைதுசெய்து அவர்களை அடித்துத் துன்புறுத்தியதுடன் ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர் அப்பகுதிகளிலுள்ள எண்பத்தைந்து வீடுகள் இவர்களால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டதுடன் ஒருவரின் வீட்டிலிருந்த பதினாறு பவுண் நகையும் ஐம்பதினாயிரம் ரூபாவும் கொள்ளையிடப்பட்டுள்ளன.


# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை மரியதாஸ்

(செட்டி)

நாவாந்துறையைச் சேர்ந்த அ. மரியதாஸ்(செட்டி) என்பவர் 15-3-91 காலை 7 மணிக்கு காலமானார். அன்னாரின் பூதவுடல் 16-3-91 இன்று காலை 10 மணிக்கு சவக்காலை வீதி மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க. ராஜா

கெனடி வீதி,
நாவாந்துறை.

(R/ 1186)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மக்கந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.